உ

கடவுள் துணை.

செந்தமிழ்

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானும் நல்லவை கேட்க வனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-௪௪.] சருவசித்து௵ ஐப்பசி௴ [பகுதி-௧௨.
Vol. 44. October—November 1947. No. 12.

உள்ளுறை.

இலக்கிய இன்பம்:- } ஸ்ரீ வித்துவான். பண்டிதர். கா. பொ. இரத்தினம் அவர்கள், B.A. (Hons.) B O L. ௪௮௧

நன்மையும் தீமையும்:- } ஸ்ரீ. பெ. நா. அப்புஸ்வாமி ஐயரவர்கள் B.A., B.L. ௪௮௬

மதிப்புரை:— ௪௯௫

செந்தமிழ் 44-ஆம் தொகுதியின் தலைப்பக்கம் உள்ளுறை முதலியவை 1—8

செந்தமிழ்நேயர்களுக்கு ஒரு வேண்டுகோள்:-அநுபந்தம். (இதன் பின்புறம்)

பத்திராசிரியர்—திரு. கி. இராமாநுஜையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.

1948

Printed by Srimathu R. Shanmuga Rajeswara Naganatha Sethupathy Avl., and Published by T. K. Ramanuja Iyengar at the Tamil Sangam Power Press, No. 54, Tamil Sangam Road, Madura.

"செந்தமிழ்" நேயர்களுக்கு ஒரு வேண்டுகோள்.

இம் மதுரைத்தமிழ்ச்சங்கத்தாரால், சென்ற நாற்பத்துநான்குவருட காலமாகத் தமிழ்மொழியின்வளர்ச்சிகருதி மாதம் ஒருமுறை வெளியிடப்பெற்றுவரும் இச்"செந்தமிழ்"ப்பத்திரிகையானது, பல பண்டிதர்களாலும் எழுதிவரப்பெறும் அரியவிஷயங்களை எளிதில் எல்லோரும் உணர வெளியிடும் பெருமைவாய்ந்ததென்பது யாவரும் அறிந்ததே. அது, செந்தமிழ்நேயர்களின் அபிமானத்தையும், பண்டிதர்களின் ஆதரவையுங்கொண்டே இப்பகுதியோடு நாற்பத்துநான்காந்தொகுதி முற்றுப்பெற்றிருக்கிறது. இனி, நாற்பத்தைந்தாந்தொகுதி தொடங்கப்பெற்று, அதன் முதற்பகுதி நாளிது சருவசித்து௵ பங்குனி௴ 15உக்குள் வெளிவரும். அப்பகுதி வழக்கப்படி அங்கத்தினர்களுக்கும், செந்தமிழ்ச் சந்தாதார்களுக்கும் அத்தொகுதியின் வருஷச்சந்தாவுக்கு வி. பி. தபாலில் அனுப்பப்பெறும். செந்தமிழபிமானிகள் வி. பி. யை அன்புடன் பெற்றுப் பத்திரிகையை ஆதரித்துவருவதோடு தங்கள் நண்பர்களையும் பத்திரிகையைத் தருவித்துப் படித்துவரும்படி தூண்டவும், பண்டிதர்கள் சிறந்த விஷயதானமளித்துச் செந்தமிழைச் சிறப்பித்து வரவும் வேண்டிக்கொள்ளப்பெறுகிறார்கள்.

அரசாங்கத்தார் வெளியிட்ட காகிதக்கட்டுப்பாட்டுத்தரவால் செந்தமிழ் பழையபக்கஅளவிற் குறைந்து வெளிவருகிறது. சந்தா நேயர்கள் பக்கக்குறைவைப் பொருட்படுத்தாது, வழக்கப்படி செந்தமிழை ஆதரித்துவரவேண்டுகிறோம்.

குறிப்பு:— நாற்பத்தைந்தாந்தொகுதிச் சந்தாத்தொகையை மணியார்டர்மூலம் அனுப்பிப் பத்திரிகையைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர், நாளிது சருவசித்து௵ பங்குனி௴ 15உக்குள் இச் சங்கமாபீசிற்குக் கிடைக்கும்படி மணியார்டரை அனுப்பிவைத்தல் வேண்டும். அதற்குள் மணியார்டர் வராவிட்டால் 45-ஆம் தொகுதியின் முதற்பகுதி வழக்கப்படி வி. பி. மூலம் அனுப்பப்பெறும். வி. பி. அனுப்பியபின்பு அதனைப் பெற்றுக்கொள்ளாது திருப்பிவிடுவதால் சங்கத்துக்கு வீண்செலவு நேரிடுமாதலால் தயைசெய்து வி. பி. யைப் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

10—3—48.
மதுரை.

லக்ஷ்மீநாராயணன், மானேஜர்.
மதுரைத்தமிழ்ச்சங்கம்.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-சச.] சருவஜித்து-ஆ ஐப்பசிமீ [பகுதி-.கஉ

Vol. 44. October—November 1947. No. 12.

இலக்கிய இன்பம்

வித்துவான், பண்டிதர்.

திரு. கா. போ. இரத்தினம் அவர்கள் B A. (Hons.), B.O.L.,

விரிவுரையாளர், அரசினர் ஆங்கில ஆசிரிய கலாசாலை, கொழும்பு.

ஒரு மொழியைப் பேசும் மக்களின் உயிர்ப்பைக்காட்டும் பளிங்கு அம்மொழியின் இலக்கியமேயென்று மேனாட்டறிஞர் கூறுகின்றனர். ஒரு மொழியின் பெருமையும் அம்மொழியைப் பேசும் மக்களின் சீரும் சிறப்பும் அம்மொழியிலுள்ள இலக்கியத்தையே பொறுத்துள்ளன. மொழியின் உயிர்நிலை இலக்கியம் என்றும் கூறல் சாலும். கார்லைல் எனும் ஆங்கில அறிஞர் கூறிய 'இந்திய சாம்பிராச்சியத்தை இழக்கவிரும்பினும், ஷேக்ஸ்பியருடைய நாடகங்களை இழக்க ஆங்கிலமக்களில் ஒருவரேனும் விரும்பார்' என்னும் கூற்று இலக்கியத்தின் எல்லையற்றபெருமையை நன்குபுலப்படுத்துகிறது.

"ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவனாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகவென் நிலவரை"[1]

[1] புறநானூறு.

என நெடுஞ்செழியன் எனும் பண்டைத் தமிழ்வேந்தன் கூறிய வஞ்சினமும் புலவர்களின் படைப்பை—இலக்கியத்தை—அவன் எவ்வாறு மதித்துள்ளான் என்பதைக் காட்டுகிறது. அலெச்சாந்தர் என்னும் கிரேக்கமன்னரும் தாம் பலதிசைகளிலும் படையெடுத்துச் சென்றபோது வேறொருநூலையும் எடுத்துச்செல்லாது, ஹோமர் என்னும் புலவர்பெருந்தகை இயற்றிய 'இலியட்' எனும் நூலை மாத்திரமே கொண்டுசென்றார் என்பர்.

இவ்வாறு இகல்வேந்தாலும் போற்றப்படும் இலக்கியம் என்பது யாது? அதனாற் பெறும் இன்பம் யாது? என்பனவற்றை ஈண்டு ஆராய்வோம்.

இலக்கியம் எனும் சொல் 'லக்ஷ்யம்' எனும் வடமொழிச்சொல்லின் திரிபென்றும், 'லக்ஷ்மி' எனுஞ்சொல் இலக்குமி என்றாயது போல 'லக்ஷ்யம்' என்பது இலக்கியம் என்று ஆகியது என்றும், அது நோக்கம் குறிக்கோள் முதலிய பொருள்களுடையதென்றும் சிலர் கூறுவர். வேறுசிலர் இலக்கணையாற் பொருள்கொள்ளக்கிடப்பது இலக்கியம் என்றும், இலக்கணை என்புது குறிப்பென்றும் உரைப்பர். இலக்கியம் இலக்கணம் என்பன தமிழ்ச்சொற்களே என்றும் 'இலக்கு' எனும் பகுதியிலிருந்து தோன்றினவென்றும், இலக்கு எனும் பகுதி முதலில் இலையை உணர்த்திப் பின் எழுத்தைக்குறித்தது என்றும், அஃதே ஆகுபெயராக நூலையும் நூற்றொகுதியையும் குறிக்கிறது என்றும் கருதுபவரும் உளர். இவர்கள்,

"இவ்வுரு செஞ்சென்னுங் கிழியின்மேலிருந்து இலக்கித்து......"

எனும் சிந்தாமணியடியில் இலக்கித்து என்பது எழுதி என்னும் பொருளில் வந்துள்ளதென்பதையும், ஆங்கிலத்தில் இலக்கியத்தைக் குறிக்கும் 'லிற்றரேச்சர்'[1] எனும் பதமும் எழுத்து என்னும்

[1] Literature.

பொருளைத்தரும் அடியிலிருந்தே[1] பிறந்ததென்பதையும் எடுத்துக் காட்டித் தம் கூற்றை நிலைநாட்டுகின்றனர்.

"ஆரணங் காணென்பர் அந்தணர் யோகியர் ஆகமத்தின்
காரணங் காணென்பர் காமுகர் காமநன் னூலிதென்பர்
ஏரணங் காணென்பர் எண்ணர் எழுத்தென்பர் இன்புலவோர்
சீரணங் காயசிற் றம்பலக் கோவையைச் செப்பிடினே"

எனும் செய்யுளில் எழுத்தென்பது இயற்றமிழிலக்கியத்தைக் குறிப்பதும் காண்க.

அளவைநூலார் இலக்கணத்தாற் காரியப்படுவது இலக்கியமென்றனர். சைனப்புலவர்கள் சீவகசிந்தாமணி சிலப்பதிகாரம் முதலிய காவியங்களை இலக்கியம் என வழங்கினர். பாரதம் இராமாயணம்போன்றவற்றை இலக்கியம் என்றார் நச்சினார்க்கினியர். தமிழ் நூலார் "இலக்கியங்கண்டதற்கிலக்கணமியம்பலின்" என்பர். அந்தாதி, கலம்பகம், கோவை முதலியவற்றை இலக்கியமென்பது உலகவழக்கு. சங்கஇலக்கியம், காவியஇலக்கியம், இதிகாசஇலக்கியம், திருமுறையிலக்கியம், புராணஇலக்கியம், பல்வகைப்பிரபந்த இலக்கியம் எனத் தமிழிலக்கியத்தைப் பலவகையாகப் பிரித்தனர் சபாபதிநாவலர். இக்காலத்திற் பாட்டுக்களானியன்ற நூல்களை மாத்திரமன்றி உரையால் ஆக்கப்பட்ட நாடகம் சிறுகதை முதலிய பலவற்றையும் இலக்கியமென வழங்குகிறோம். ஆரியமொழியிலும் பாட்டானியன்றவை பத்தியமென்றும், உரையாற்செய்யப்பட்டவை கத்தியமென்றும், பாட்டும் உரையும் என்னும் இரண்டாலும் ஆக்கப்பட்டவை சம்பு என்றும், இம் முத்திறத்தன யாவும் இலக்கியமென்றும் கொள்ளப்படுகின்றன. ஆங்கிலம் முதலிய மேனாட்டு மொழிகளிலும் பாட்டு உரை ஆகிய இரண்டினாலும் ஆக்கப்பட்டவற்றையே இலக்கியமென்கின்றனர்.

---

[1] Letters.

இனி, இலக்கியம் எத்தகையது என்பதைப்பற்றி ஆராய்ந்துரைத்த மேனாட்டறிஞர்பலர் பல்வேறுகருத்துக்களை உடையவர்களாகக் காணப்படுகின்றனர். 'மக்கள்யாவர்க்கும் பொதுவாகப் பயனளிக்கும் நூல்கள்மாத்திரமே இலக்கியம்' என்று கூறினர் கட்சன்[1] எனும் ஆசிரியர். இவருடையகருத்துக்குமாறாக ஒருசிலருக்குமாத்திரம் பயன்படும் சட்டநூல், தத்துவநூல், சரித்திரநூல் முதலிய பலநூல்களுங்கூட இலக்கியத்தின்பாற்படும் என உரைத்தார் ஹாலம்[2] என்பார். மோர்லி[3], எமர்சன்[4], நியூமன்[5], கார்லைல்[6] முதலிய ஆசிரியர்களுடைய கூற்றுக்கள் மேலே கூறப்பட்ட இருவர்கூற்றுக்களுக்கும் இடையில் அமைந்துள்ளன.

இப்படிப்பட்ட பல்வேறுகருத்துக்கள் காணப்படினும், இலக்கியம் இத்தகையதென்பதை மொழிகளின்வரலாற்றினையும் புலவர்களின்கூற்றுக்களையும் பிறவற்றையும் ஆதாரமாகக்கொண்டு நாம் அறிந்துகொள்ளலாம்.

உலகத்திலுள்ள மொழிகளிலெல்லாம் தொடக்கத்தில் பாட்டுருவத்திலேயே சிறந்த இலக்கியங்களை இயற்றினர். காலம் செல்லச்செல்ல உரைநடையிலும் இலக்கியங்கள் எழுதப்பட்டன. தமிழ்மொழியிற் பல்வகைப் பாவினங்கள் இருக்கின்றனவாகையால் தமிழ்ப்புலவர்கள் இலக்கியங்களை எழுதுவதற்கு வடமொழியிற்போல் உரைநடையை அதிகம் பயன்படுத்தவில்லை. எனினும் உரையும் செய்யுள்வகைகளில் ஒன்றே[7] எனவும், பாட்டுடன் விரவி நூல்களில் முன்பும் பயின்றுளதெனவும் தொல்காப்பியம் சிலப்பதிகாரம் பெருந்தேவனார்பாரதம் முதலிய நூல்களால் அறிகிறோம்.

---

[1] W. H. Hudson. [2] Hallam. [3] Viscount Morley. [4] Emerson. [5] Cardinal Newman. [6] Thomas Carlyle.

[7] "பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முதுசொல்லோ டவ்வேழ் நிலத்தும்" தொல்—செய்யுளியல் 75.

ஆகவே, தமிழ்மக்களும் பாட்டையும் உரையையும் இலக்கியத்திற்குரிய வடிவங்களாகக்கொண்டுளர் என்பது பெறப்படுகிறது. இவ்வாறயின் இவ்விருவடிவங்களிலுமுள்ள நூல்கள் யாவும் இலக்கியமாகுமா? என்ற வினா எழும்புவது இயல்பே. இவ்வினாவிற்கு விடை காண்போம்.

இலக்கியம் ஒரு படைப்பு; பிரமனுடைய ஆக்கற்றொழிலை ஒத்தது. பிரமன் படைக்கிற உடம்புகள் அழிந்துபோகின்றன. அறிஞர்கள் படைக்கிற இலக்கியங்களோ என்றும் அழியாத உடம்பும் உயிரும் உடையன. இந்த உண்மையைக் குமரகுருபரர் மிக விளக்கமாக எடுத்துரைத்துளர்.

"கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினும்
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான்—மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வதுபோல் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யு முடம்பு"

என்பது அவர்கூற்று. 'உண்மையான படைப்புக்களைச் செய்பவன் புலவனே' எனக் கறே எனும் பேராசிரியரும் கூறுநிற்பர்.[1]

இலக்கியங்களுக்கு உயிர் பொருளும் உடம்பு சொற்களுமாகும். சிறுகுழந்தைகள் மண்ணினாற் சிற்றிலமைத்து விளையாடுவது போல் விநோதார்த்தமாகச் சிலவற்றை ஆக்கிவிட்டு அவற்றைச் சிறந்த இலக்கியமென்று கூறிவிடமுடியாது.

"பல்வகைத் தாதுவின் உயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிட னாக உணர்வினின்
வல்லோர் அணி பெறச் செய்வன செய்யுள்"

என நன்னூலாசிரியர் கூறிய செய்யுளிலக்கணம் இலக்கியத்திற்கும் மிகமிகப் பொருத்தமானது. என்னை? அழகுபெறப் படைக்கும்

---

[1] It is the poet who is the true maker—Professor Gurrey.

ஆற்றலுள்ளவர்களாற் செய்யப்படுவதுதான் இலக்கியமாதலின் உணர்ச்சிப்பெருக்கில் கற்பனைச்செறிவில் கவிதைவெறியில்—திளைத்துத் தம் நுண்மாணுழைபுலத்தால் உலகத்தவர்கள் அழகையும் உண்மையையும் நன்மையையும் கண்டு இன்பமடையத்தக்கதாக இலக்கியங்களை ஆக்கும் ஆற்றலுள்ளவர்கள் மிகச் சிலரே. இவர்களையே மெய்ப்புலவர்கள் என யாவரும் போற்றுகின்றனர். இவர்கள் ஒரு காட்சியையோ கதையையோ கருத்தையோ கூறும்பொழுது அதற்குப் பொருத்தமான உடம்பினைப் படைத்து உயிர்கொடுத்து அதனைப் படிப்போரும் கேட்போரும் தெவிட்டாத இன்பம்பெறத்தக்கதாகச் செய்யும் புலமை கைவரப்பெற்றவர்கள். இத்தகையோர் இயற்றிய சிறந்த இலக்கியங்களாகிய சிலப்பதிகாரம், திருக்குறள், இராமாயணம் முதலியவற்றில் உடம்பையும் உயிரையும் கண்டு யாவரும் இன்புறுகின்றனர். நிற்க.

உயிர் உடல் ஆகிய இவ்விரண்டினுமுள்ள குறைகளாலேயே பல்வேறுமொழிகளிலும் இயற்றப்படும் நூல்களிற் பல அழிந்தொழிகின்றன. தமிழிலும் நம் கண்முன் அழிந்தொழியும் நூல்கள் பலவன்றோ? இப்பொழுது உலகமெங்கும் எல்லாமொழிகளிலும் இலக்கியம் நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்ந்துகொண்டுவருகின்றது. எனினும், குறைபாடுடைய படைப்புக்களும் விரைந்து மறைந்துகொண்டேவருகின்றன.

ரஸ்கின் எனும் ஆங்கிலப்பெரியார் நூல்களை நிலையானவை நிலையற்றவை என இரண்டாகப் பிரித்து இவ்விருபிரிவிலும் நல்லனவும் தீயனவும் உண்டென்கிறார். நிலையான நல்ல நூல்களே சிறந்த இலக்கியத்தின்பாற்படுவன. ஏனையன படிக்கும்பொழுதுமாத்திரம் சிறிது இன்பத்தைப் பயக்குமன்றி, அவைபோல நிலைபேறுள இன்பத்தையும் அரும்பயனையும் அளிக்கமாட்டா. நிலையான சிறந்த நூல்களைக் கற்றல் அரசர்களுடனும் அரசிகளுடனும் உரையாடு

தலைப்போன்றதெனவும் எனையவற்றைக் கற்றல் பணியாட்களுடன் பேசுவதைப்போன்றதெனவும் ரஸ்கின் கூறியுள்ளார்.

"என்றும் புலரா தியாணர்நாட் செல்லுகினும்
நின்றலர்ந்து தேன்பிலிற்றும் நீர்மையதி"

தெய்வக் கற்பகமலர் எனப் புலவர்கள் கூறுவர். இந்த அற்புதமான கற்பகமலரைப்போல என்றும் வாடாது நிலைத்துநின்று யாவர்க்கும் இன்பத்தை எப்பொழுதும் அளித்துவிளங்குவனவே சிறந்த இலக்கிய நூல்களாகும். இவை படிக்கப் படிக்கப் புதிய புதிய இன்பத்தையும் உள்ளக்கிளர்ச்சியையும் அளித்துப் படிப்பவர்களைத் தம்முடைய இணைபிரியா நண்பர்களாக ஆக்கிக்கொள்ளுந்தன்மையுடையன. இதனை "நவில்தொறும் நூனயம்போலும்" எனத் திருவள்ளுவர் சுருக்கமாகக் குறிப்பிட்டார்.

"புவியினுக் கணியாய் ஆன்ற பொருள்தந்து புலத்திற் றாகி
அவியகத் துறைகள் தாங்கி ஐந்திணை நெறிய ளாவிச்
சவியுறத் தெளிந்து தண்ணென் றொழுக்கமுந் தழுவிச் சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா வரியினை வீரர் கண்டார்"

எனும் இச்செய்யுளிலே கம்பர் மெய்ப்புலவர்களுடைய பாட்டுக்களின் பண்புகளை எடுத்துக்காட்டியிருக்கிறார். இப்பண்புகளைக் கொண்டனவே சிறந்த இலக்கிய நூல்கள் எனக் கூறுதல் சாலப் பொருத்தமானதே. மேலும் இப்பண்புகள் இலக்கியத்திற்குரியனவாக மேனாட்டறிஞர்கள் ஆராய்ந்துரைத்த சிறந்தபண்புகள் யாவற்றையும் அடக்கிமிளிர்கின்றன என்பதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. 'புவியினுக்கணியாய்' எனும் தொடர் அழகையும், 'ஆன்ற பொருள்தந்து புலத்திற்றாகி' என்பது உண்மை நன்மைகளையும் குறிக்கின்றன. இவற்றையே "இலக்கியம் சிறந்த கருத்துக்களைக் கொண்டது"[1] என எமர்சனும், இலக்கியம் உள்ளதை உள்ளவாறே

---

[1] Literature is a record of best thoughts —Emerson.

உரைக்கவேண்டும்"[1] எனப் பிளேற்றோ ஹட்சன் முதலிய ஆசிரியர்களும் உரைத்துளர். "அவியகத்துறைகள்தாங்கி ஐந்திணைநெறியளாவி" என்பது இயற்கையையும் மக்களின் வாழ்க்கையினையும்பற்றியது. இவற்றையே ஹட்சன், எனும் ஆசிரியர் கூறிய "மொழியின் வாயிலாக மக்கள்வாழ்க்கையை எடுத்துக்காட்டுவது இலக்கியம்"[2] என்பதும், கார்லைல் கூறிய "இயற்கையின் எழிலை எடுத்துக்காட்டுவது இலக்கியம்"[3] என்பதும் தழுவியுள்ளன.

இதுகாறுங்கூறியவற்றால் சிறந்த உடம்பும் உயிரும்—சொல்லும் பொருளும்—உடையனவாகவும் மக்கள்யாவர்க்கும் பயன்படத் தக்க அழகு உண்மை நன்மை எனும் பண்புகள் நிறைந்தனவாகவும், கற்பகமலர்போல என்றும் வாடாது எப்பொழுதும் இன்பம் அளிக்கத்தக்கனவாகவும் சிருட்டிக்கும் ஆற்றல்வாய்ந்த மெய்ப்புலவர்களால் உரைவடிவத்திலேனும் பாட்டுவடிவத்திலேனும் இயற்றப்படுவனவே இலக்கியங்கள் என்பது பெறப்படுகிறது. இவை காப்பியங்களாக, கதைகளாக, நாடகங்களாக, தனிப்பாடல்களாக, விருந்துகளாக அன்றேற் பிறவாக அமைந்து விளங்கலாம்.

[தொடரும்]

---

[1] Principle of Sincerity.

[2] Literature is thus fundamentally an expression of life through medium of language—Hudson.

[3] Literature is an apocalypse of nature—Carlyle.

நன்மையும் தீமையும்

ஸ்ரீ. பே. நா. அப்புஸ்வாமி ஐயரவர்கள் B.A., B.L. சென்னை.

சமீபத்தில் முடிவடைந்த இரண்டாவது உலக மகாயுத்தம் நிகழ்ந்துகொண்டிருக்கும்போது ஒவ்வொரு பெரிய நகரத்திலும், முக்கியமாகக் கடற்கரையோரத்திலுள்ள நகரம் ஒவ்வொன்றிலும், இரவில் விளக்கொளி வெளியில் தெரியவேகூடாது என்னும் 'மையிருட்டு' முறை விதிக்கப்பட்டது. எல்லா மக்களும் இம்முறையைப் பின்பற்றும்பொருட்டுக் காவல்வைத்திருந்தார்கள். இம்முறையை மீறுபவர்க்குத் தண்டனை விதித்திருந்தார்கள். மோட்டார்க்கார்களின்முன் வைத்திருக்கும் பிரகாசமான விளக்குகளின் ஒளியை முக்கால்வாசிக்குமேல் மறைத்துவிடவேண்டும் என்னும் உத்தரவு பிறந்திருந்தது. இவ்வகை ஒளிகளால் எதிரிகள் நகரம் இருக்குமிடத்தை அறிந்து, ஆகாயவிமானங்களிலிருந்து நகரத்தைத் தாக்குதல்கூடும், அவ்வாறு தாக்கவொட்டாது தடுக்கவேண்டும் என்பதே இதற்குக் காரணம்.

போர் முடிந்தபின்புங்கூட மோட்டார்க்கார்முன் வைத்துள்ள விளக்குகள் இன்ன அளவுக்குமேல் பிரகாசமான ஒளி வீசக்கூடாது, இவ்வளவுதூரத்துக்குமேல் எதிரே ஒளிக்கிரணங்களை வீசக்கூடாது என்னும் சில விதிகள் அமுலுக்குக்கொண்டுவரப்பட்டன. இதற்குக் காரணம் என்னவென்றால், பாதைகளில் அவற்றுக்கு எதிரே வருபவர்களுடைய கண்ணில் இவ்விளக்குக்களின் ஒளி தாக்கி, அவர்களுடைய கண்களைக் கூசச்செய்யும்; அதனால், அவர்கள் தங்களுக்கு எதிரே வருவது ஒன்றையும் காணமுடியாமல் திண்டாடுவார்கள்; அந்நிலையில் ஆபத்து நேரக்கூடும் என்பதே.

ஒளிவிஷயத்தைக் குறித்த இந்த முறை நல்லதுதான். ஆயினும், இதைப்போல் ஒருமுறை ஒலிவிஷயத்தில் இன்னும் கையாளப்படவில்லை. ஒளி கண்ணைக் குருடாக்குவதுபோல் ஒலியும் காதைச் செவிடாக்கும். ஆகையால் ஒலி விஷயத்திலும் இவ்வகையான ஏற்பாடு இருக்கவேண்டியது அவசியம். அமைதி நிலவும் கிராமங்களில் உள்ளவர்கள் இதன் அவசியத்தை அவ்வளவு உணரமாட்டார்கள். பலவகைச் சத்தங்கள் மிகுந்த நகரங்களில் வாழ்பவர்கள் இது மிகவும் முக்கியமான விஷயம் என்று நன்றாக உணர்

வார்கள். காலைமுதல் மாலைவரையும்—ஏன், இரவிலும் கூடத்தான்—நூற்றுக்கணக்கான சத்தங்கள் காதைத் துளைத்துக்கொண்டேயிருக்கின்றன. பண்டம் விற்போரின் குரல்; உரக்கச் சண்டையிடுவோரின் கூச்சல்; சடசடவென்று பலவிதச் சத்தமிடும் டிராமின் ஓசை; கடகடவென்று ஓடும் வண்டிகளின் ஒலி; சைக்கிள் மணியின் கிணுகிணு என்னும் சத்தம்; மோட்டார்க்கார், ரயில், ரோட்-எஞ்ஜின் முதலியவற்றின் ஊதல்கள்; நாய் மாடு காக்கை முதலிய விலங்கு பறவைகள் எழுப்பும் சத்தம்; சிற்றுண்டிச்சாலைகளிலிருந்து ரேடியோ, கிராமபோன் முதலியவைகள் இயற்றும் ஓசை; தலைக்குமேல் ஆகாயவிமானம் போடும் பேரிரைச்சல்: ஆகிய இவையாவும் தனித் தனியும் ஒன்றாகக்கூடியும் இயற்றும் ஓசை நகரங்களில் நாள்தோறும் நமது செவிகளைத் தாக்கிக்கொண்டேயிருக்கின்றது.

இவற்றையெல்லாம் தடுத்து, நமது காதுகளைக் காப்பாற்ற இன்னும் ஒழுங்கான ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. இவற்றை முழுதும் நிறுத்தி, நகரத்தை ஊமையாக்குவது அவசியமில்லை; முடியவும் முடியாது. ஒளியை முழுதும் தடுக்காமல் மட்டுப்படுத்தியிருப்பதுபோலவே, ஒலியையும் மட்டுப்படுத்துவது அவசியம். ஒலியை முழுதும் தடுத்துவிட்டால் நாம் அனைவரும் ஜாடைகாட்டியே பேசவேண்டிவரும். உலகவாழ்க்கை சுவையற்றுப்போய் விடும். ஒருவர்கருத்தை ஒருவருக்குத் தெரிவிக்கவும் இயலாது. மனிதஇனம், தான் சிறப்பாகப்பெற்ற பேச்சுத்திறமையை இழந்து, வளர்ச்சிகுன்றி, அழிந்துபோகும். ஆதலால் ஓரளவு ஒலி இருந்தேயாகவேண்டும். 'இந்தச் சத்தங்கள் உங்களுக்குப் பிடிக்காவிட்டால், காதில் பஞ்சை அடைத்துக்கொள்வதுதானே. ஏன் மற்றவர்களைத் தடைசெய்யவேண்டும்?' என்று கேட்கலாம்.

இதைத் தடுக்கமுயலுதற்குக்காரணம் ஒலியின் தன்மையே. ஒலி என்பது அதிர்ச்சியால் உண்டாவது. ஒரு பொருளானது மெல்ல அசைந்தால், அப்போது அதன் அருகிலுள்ள காற்றில் அலைவு ஏற்படலாமேயொழிய, ஒலியுண்டாகாது; ஆனால், அது மிகவிரைவாக அதிர்ந்தால்—அதாவது காற்றை வேகமாக அதிர்த்துத் தாக்கினல்— அப்போது ஒலி உண்டாகும். நாம் நமது கையை அசைத்தால் ஒலி உண்டாவதில்லை. வானத்தில் மெல்லப் பறக்கும் பருந்து தன் சிறகைமெத்தென அசைத்தால் அப்பொழுதும்

ஒலி உண்டாவதில்லை. வண்டும் கொசுவும் தம் மெல்லிய சிறகுகளை மிகவும் விரைவாக அடித்துப் பறக்கும்போது அச்சிறகுகள் காற்றைத் தாக்குவதால் ஒலி எழுகிறது. ஓசைக்குக் காரணம் சிறகுகளின் அதிர்ச்சி. இரத்தத்தைக் குடிக்கும் கொசு ஆனந்தவெறியில் 'பாடுகிறது' என்றும், தேனைப் பருகும் வண்டு மகிழ்ச்சியுற்று 'ரீங்காரம்' செய்கிறது என்றும் நாம் எண்ணுவது தவறு. பறக்கும் கொசுவும் வண்டும் உட்கார்ந்தவுடன், அவற்றின் ஓசை அடங்கி விடுகிறது. வீணையிலிருந்தும் தம்பூரிலிருந்தும் ஓசை எழுவதும் இவ்வாறே. தந்திகளின் துடிப்பால் அவை காற்றில் மோதி, இன்னிசையை உண்டாக்குகின்றன. மத்தளமும் பேரிகையும் தோல் அதிர்வதாலேயே முழங்குகின்றன.

இவ்வாறு பொருள்களின் அதிர்ச்சி நமது காதில் ஒலியாகக் கேட்பது எப்படி? அதிரும் பொருள்கள் தங்களைச் சூழ்ந்துள்ள காற்றைத் தாக்கி, அதை அசையச்செய்கின்றன. அவ்வசைவுகள் காற்றில் மோதி, அலையலையாகப் பரவிக் காற்றின்மூலமாக நம்மை வந்தடைகின்றன. நமது காதில் உள்ள மெல்லிய ஜவ்வுபோன்ற ஓர் உறுப்பில் இவ் அலைகள் உறைக்கின்றன. அப்போது அவ்வுறைப்புக்கு ஏற்ப, அந்த ஜவ்வின் பின்புறமுள்ள சில உறுப்புக்கள் அசைகின்றன. அவ் அசைவுகள் அங்குள்ள நரம்புகளின் மூலமாக மூளைக்கு அறிவிக்கப்படுகின்றன. மூளையில் இதற்கென்று வளர்ச்சியுற்ற ஒரு பகுதிக்கு அவை செல்லுதலும், அப்பகுதியானது அதைப் பலவகை ஒலிகளாக உணர்ந்து அறிவிக்கிறது.

பஞ்சைக்கொண்டு, காதின் துளையை அடைத்துவிட்டால், காதிலுள்ள ஜவ்வு அவ்வளவு அசையாது; ஒலியும் அவ்வளவு நமக்குப் புலனாகாது; உண்மைதான். ஆனால், நாம் மேலே கூறிய வாறு, ஒலிக்குக்காரணம் அதிரும் பொருள்களால் காற்றில் எழுப்பப்படும் அலைகள். ஆதலால், அவ்வகை அலைகள் நமது காதிலுள்ள ஜவ்வில்மட்டுமன்றி நமது உடல்முழுவதிலும் உறைக்கின்றன.

அவ்வாறு உடலில் தாக்குறும் மற்ற உறுப்புக்களுங்கூட அத் தாக்குதல்களுக்கு உள்ளாகிவருகின்றன என்பதில் ஐயமில்லை. 'கிராமத்திலிருந்து புதிதாக நகரத்துக்குவரும் ஒருவன் நகரச்சத்தங்களால் இரவில் தூக்கம் கெட்டும், பகலில் வேலைசெய்யமுடியாமல் சலிப்படைந்தும் வருகிறான். ஆயினும், சில நாட்களில் நகரச்

சத்தங்கள் அவனுக்கு வழக்கமாகிவிடுகின்றன. வழக்கமில்லாத காரணத்தாலேயே முதலில் அவன் வருந்துகிறான். ஓசைகளைக் கேட்டுப் பழகிவிட்டபின்பு அவனுக்கு யாதொரு தீங்கும் விளைவதில்லை' என்று எண்ணினார்கள்.

உண்மையில் நடப்பது என்னவென்றால், பிராணதாரப் போராட்டத்தில் ஈடுபட்ட நம்முடைய உடலானது எல்லாவிதத் தாக்குதல்களினின்றும் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள முயன்று கொண்டேயிருக்கிறது. அதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக் கொண்டேயிருக்கிறது. உதாரணமாக, உடலை நோய்க்கிருமிகள் தாக்கினால் அவற்றை அழிக்க ஏற்ற பொருள்களை இயற்றுகிறது என்பதை ஆதாரமாகக்கொண்டுதான் அம்மைகுத்துதல் முதலிய காப்புமுறைகள் கையாளப்படுகின்றன. இதைப்போலவே ஒலி விஷயத்திலும்.

ஒலி என்பது சக்தி; ஆகையால் தன்னைத் தாக்கும் ஒலி என்னும் சக்தியைத் தடுப்பதற்கு வேண்டிய சக்தியை உடல் இயற்றித் தன்னைத் தாக்கும் அச்சக்தியை அழித்துவருகிறது. இது தன்னையறியாமலே, உடலமைப்பினால் தானாக நடந்துவரும் செயல். இவ்வாறு ஒவ்வொருவரும் ஓசைகளுக்கு உள்ளாகும்போதெல்லாம், தம்மையறியாமலே, கணந்தோறும், சக்தியை இயற்றிக் கொண்டேயிருக்கிறார்கள். தாங்கள் உண்டாக்கிய சக்தி தங்கள் உடலைவிட்டுநீங்குவதால் அவர்கள் அதை இழந்துவருகிறார்கள். நாளடைவில் இவ்வகையாய் இழக்கும் சக்தியை அளவிட்டால் அதன் மொத்த அளவு எவ்வளவு அதிகம் என்று தெரியும். இப்படி ஒலிக்கு உள்ளாவதால் அவர்களுடைய உடல் வலிகுன்றுகிறது. அவர்களும் பலவிதமான நோய்களுக்கு உள்ளாகிறார்கள்.

ஒலியின் தாக்குதல்களுக்கு உள்ளாகிக் கேடுறுவது மனிதர்களுடைய உடல்மட்டுமன்று, பொருளுங்கூட. மனிதர்கள் வாழும் கட்டடங்களும் பலவகை ஒலிகளால் தாக்குண்டு, அதிர்ந்து வலிகுன்றி, அலைந்து ஆடிப்போகின்றன.

நமக்குப் பலவாறாக நன்மைபயக்கும் ஒலிகள் பல தீமைகளையும் விளைவித்துவருவது ஆச்சரியமல்லவா?

மதிப்புரை

திருச்சதகம் கதிர்மணிவிளக்கம் என்னும் பேருரையுடன்:— திருச்சதகம் என்பது சிவப்பணிமேற்கொடு பவப்பிணிகடந்த மணிவாசகப்பெருமான் அருளிய திருவாசகத்துள் நூறுபாசுரங்களால் அமைந்த ஒரு பகுதியாகும். கதிர்மணிவிளக்கம் என்பது அத் திருச்சதகத்துக்கு மஹாமஹோபாத்யாய பண்டிதமணி முதுபெரும் புலவர் திரு. மு. கதிரேசச்செட்டியாரவர்கள் வரைந்துதவிய விரிவுரையாகும்.

பெயர்கள், தம் முழுவடிவத்தால் தம்பொருளைப் புலப்படுத்துவதேயன்றித் தம் ஏகதேசத்தானும் பொருளையுணர்த்தும் முறையில், இவ்வுரைப்பெயர், (வாதவூரடிகள் வழங்கிய பாடல்களாகிய) 'இலங்கொளி மாணிக்க(ங்களின்) விளக்கம்' என்றும், உரையாசிரியரியற்பெயரும் சிறப்புப்பெயருமாகியவற்றுள் முன்னதன் முதலும் பின்னதன் இறுதியும் இயைந்து, 'கதிரேசராகிய பண்டிதமணி வழங்கிய விளக்கவுரை' என்றும் பொருள்படுமாறு அமைந்துளது.

இவ்வுரை, தன் பெயருக்கேற்பப் பாட்டுமுதலியபொருளும் பதிகம் முதலியபொருளும் சதகம் முதலியபொருளும் ஆகியவை முன்னொடுபின்முரணாது ஒன்றுடனொன்று இயைந்து பொருந்துமாறு தக்க மேற்கோள்களோடு விளக்குவது; சைவசமயநுண்பொருண்முடிவுகளைக் காவியச்சுவையொடுகலந்து புகட்டுவது; இடையிடையே செறிந்த பதசாரங்களும் இலக்கணக்குறிப்புக்களும் கொண்டு மிளிர்வது.

தமிழ்மக்களால்மட்டுமன்றி வேற்றுமொழிமாந்தராலும் போற்றும் சீர்மைத்தாகிய திருவாசகப்பாடல்கள் சிலவற்றுக்குப் பண்டிதமணியவர்கள் ஆங்காங்கு உரைவிரிக்கக்கேட்டு, அவற்றுள் அமைந்த நயம் கண்டு, திருவாசகம் முழுவதுக்குமே அவர்கள் விரிவுரைவரைந்து நல்கவேண்டுமென்று விழைந்தோர் பலர். அவர்கள் விருப்பம் இன்று ஓரளவு நிறைவுற்றது மகிழ்ச்சிவிளைக்கிறது.

எஞ்சியபகுதிகளுக்கும் விரிவுரை வரைந்து வழங்கித் தமிழ்மக்கள் விருப்பத்தை முற்றுவிக்கும்வண்ணம் பண்டிதமணியவர்களுக்கு எல்லாம்வல்ல இறைவன் அருள்புரிக.

இச்சதகப்பாடல்களின் அகத்தோற்றம்போலப் புறத்தோற்றமும் நன்கமைய அச்சிடுதற்குவேண்டிய பொருளுதவிபுரிந்த தமிழ்ப்பெருஞ்செல்வர் மதுரை ஸ்ரீமீநாக்ஷியாலை நிருவாகத்தலைவர் கரு. முத்து. தியாகராசச்செட்டியாரவர்கள் இன்னோரன்ன தமிழ்ப் பணிபுரிந்து நீடுவாழ்க.

இதன்விலை ரூபா 8. கிடைக்கும் இடம்:— பொதிகைப்பதிப்பகம், 22 ௬. அப்பாவுமுதலிதெரு, கடலூர் N. T.

சைவசமயசாரம்:— இது, சைவசமயிகள் அறிந்துகொள்ள வேண்டிய பதி பசு பாச இயல்புகளையும் கடைப்பிடித்தொழுக வேண்டிய நெறிகளையும்பல தலைப்பின்கீழ் இனிது விரிப்பது; செவ்விய எளிய தமிழுரைநடைவாய்ந்தது; பிறமதநிந்தனையற்றது; சிறப்பாகச் சைவ இளைஞர்க்கும் பொதுவாக எல்லா இளைஞர்க்கும் பயன்படத்தக்கது; யாழ்ப்பாணத்துப் புலோலிநகரவாசரும் சுழிபுரம் விக்டோரியாகலாசாலைத்தலைவராயிருந்து இப்போது இளைப்பாறுபவரும் சைவசமயம்பற்றிப் பல சிறிய சீரிய உரைநடைநூல்களையெழுதிவெளியிட்டவரும் ஆன உயர்திரு. சு. சிவபாதசுந்தரம்பிள்ளை B.A. அவர்களால் எழுதப்பட்டது. இதன் உரைநடையமைதி பிள்ளையவர்கள்பால் அமைந்த அரியபொருள்களையும் எளியவாக்கிப்புகட்டும் நல்லாசிரியரியல்பினை விளக்குகிறது. இதனை யாவரும் படித்துப்பயனெய்தும்படி திருச்சிராப்பள்ளிச் சைவசமயபரிபாலன சபைப்பிரசுரமாக அச்சிட்டு வெளியிடுவித்த பிக்ஷாண்டார்கோயிற் பெருநிலக்கிழவர் உயர்திரு. இராய்பகதூர் கோ. இராசகோபால பிள்ளையவர்கள் சமயப்பற்றும் தமிழ்ப்பற்றும் பாராட்டத்தக்கன. இதன் விலை அணா 4. கிடைக்கும் இடம்:— ஆனந்தவிலாசம், பிக்ஷாண்டார்கோயில், திருச்சிராப்பள்ளிஜில்லா.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை

நாற்பத்துநான்காந்தொகுதி.

Volume 44.

விய—சருவசித்து ௵

1946—1947

பத்திராசிரியர்—திரு. கி. இராமாநுஜையங்கார்.

மதுரைத்தமிழ்ச்சங்கமுத்திராசாலை,

மதுரை.

உ

கடவுள் துணை

செந்தமிழ்

௪௪-ஆம் தொகுதியின் உள்ளுறை.

விஷயம்.	எழுதியவர்.	பக்கம்.
அநுதாபக் குறிப்புக்கள்:—	ஸ்ரீ. உப. வே. பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியஸ்வாமி	... ௧௪௧
	,, திவான்பஹதூர் V பாஷ்யமையங்கார் ஸ்வாமி	... ௧௪௨
	,, மஹாமஹோபாத்யாய பண்டிதமணி. மு. கதிரேசச்செட்டியாரவர்கள்	... ௧௪௨
	,, ச. சோமசுந்தரபாரதியாரவர்கள்	... ௧௪௩
	,, ராவ்ஸாஹிப், S வையாபுரிப்பிள்ளையவர்கள் B.A., B.L.	... ௧௪௩
	,, வே. வ. இராமசாமி அவர்கள்	... ௧௪௪
	,, சி. கணேசையரவர்கள்	... ௧௪௪
ஆசிரியர்பிரிவு:—	உதவிப்பத்திராசிரியர்	... ௧௩௩
ஆராய்ச்சியின் முக்கியத்தன்மை:—	ஸ்ரீ. பேராசிரியர் ஜே. பி. மாணிக்கம் அவர்கள் M.A., L.T.	... ௧
இந்திய தேசீயக் கொடிவாழ்த்து:—	உதவிப்பத்திராசிரியர்.	... ௧௨௧

இரங்கற்பாக்கள்:—	T. K. இராமாநுஜையங்கார்	௧௪௫
	ஸ்ரீ. சு. நல்லசிவன்பிள்ளையவர்கள்	௧௪௯
	,, K. சிவஞானம்பிள்ளையவர்கள்	௧௫௩
	,, இ. சே. வரதராஜையரவர்கள்	௧௫௫
	,, A. பூவராகபிள்ளையவர்கள்	௧௫௭
	,, பு. சி. புன்னைவனநாதமுதலியாரவர்கள்	௧௫௮
	,, பாலகவி வயிநாகரம் வே. இராமநாதன்செட்டியாரவர்கள்.	௧௫௯
	,, பண்டித. நா. கனகராஜையரவர்கள்	௧௬0
	,, ,, சித. நாராயணசாமியாரவர்கள்	௧௬௨
	,, ஜெ. நாராயணசுந்தரமையங்காரவர்கள்	௧௬௩
	,, வித்வான். ரா. இராமாநுஜையங்காரவர்கள்	௧௬௪
	,, ,, சிரோமணி. V. N. ஸ்ரீராமதேசிகாசாரியரவர்கள்.	௧௬௬
	,, ,, S. ஆழ்வாரையங்காரவர்கள்	௧௭0
	,, வே. முத்துஸாமி ஐயரவர்கள் M.A., L.T.	௧௭௨
	,, திரு. கோ. அப்பனையங்காரவர்கள்	௧௭௩
	,, சி. கணேசையரவர்கள்	௧௭௪
	,, வித்வான். ரெ. இராமையங்காரவர்கள்	௧௭௪
	,, ,, E. G. நாராயணையங்காரவர்கள்	௧௭௬
இல்லறக்கிழத்தி மாண்புகள்:—	ஸ்ரீ. சி. கணேசையரவர்கள்	௮௨
இலக்கிய இன்பம்:—	ஸ்ரீ. பண்டிதர். கா. பொ. இரத்தினம் அவர்கள், B.A. (Hons.) B.O.L.	௧௮௧
கச்சிக்கலம்பக அரங்கேற்றவைபவம்	ஸ்ரீ. சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளையவர்கள்	௪௯
கோல்லம் ஆண்டு:—	ஸ்ரீ. T. V. சதாசிவபண்டாரத்தாரவர்கள்	௩௩
சுதந்திரதினவிழாநிகழ்ச்சி:—	பத்திராசிரியர்	௧௨௫

சுவாமி விபுலாநந்தர் மறைவு:—	பத்திராசிரியர்	௧௭௮
	ஸ்ரீ. மஹாமஹோபாத்யாய பண்டிதமணி மு. கதிரேசச்செட்டியாரவர்கள்	௧௭௧
செந்தமிழ்:—	ஸ்ரீ. சி. கணேசையரவர்கள்	௫௩
சோலைமலைக் குறவஞ்சி:—	ஸ்ரீ. அலங்காரதேவராஜன் அவர்கள்	௧௦௧
தமிழ்நாட்டுமக்களின் சில ஒழுக்கமரபுகள்:—	ஸ்ரீ. சி. கணேசையரவர்கள்	௧
தமிழ்வசனநடை:—	ஸ்ரீ. சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளையவர்கள்	௬௫
திருக்கருவை வெண்பா வந்தாதி:—	ஸ்ரீ. பண்டித. இராமசுப்பிரமணிய நாவலரவர்கள்	௧௭
திருக்கோளிலிக் கல்வெட்டுக்கள்:—	ஸ்ரீ. வை. சுந்தரேசவாண்டையாரவர்கள்	௧௧௭
திருப்பதிக்கோவை:—	ஸ்ரீ. வித்வான் ரெ. இராமையங்காரவர்கள்	௫௯
திருவேங்கைக்கோவை:—	ஸ்ரீ. சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளையவர்கள்	௧௧௨
தொல்காப்பியத்திற்கண்ட தமிழர்சமயம்:—	ஸ்ரீ. சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளையவர்கள்	௭௯
நன்பு:—	ஸ்ரீ. R. அரங்கராஜன் B.A. அவர்கள்	௩௯
நன்மையும் தீமையும்:-	ஸ்ரீ. பெ. நா. அப்புஸ்வாமி ஐயரவர்கள் B.A., B.L.	௧௮௯
பண்டைமக்களின் போது இருப்பிடம்:—	சுவாமி ஞானப்பிரகாசரவர்கள், நல்லூர்.	௫, ௬௮
பத்திராசிரியர்குறிப்பு:—		௭௧
பன்னிருதிங்கட்பெயரும் வந்த பாட்டு:—	ஸ்ரீ. வித்வான். ரா. இராமாநுஜையங்காரவர்கள்.	௧௫
பாரத சுதந்திரத்திருநாட் பாட்டு:-	ஸ்ரீ. க. சு. நவநீதகிருஷ்ண பாரதியாரவர்கள்	௧௩௧
பாரத சுதந்திரதினவிழா வாழ்த்துப்பாக்கள்:—	ஷை	௧௩௨
பூண்டி அரங்கநாதமுதலியார் தனிக்கவிகள்:—	ஸ்ரீ. சே. வெ. ஜம்புலிங்கம் பிள்ளையவர்கள்	௨௩

மதிப்புரை:— எஉ, கஉரு, கூ௦, ககரு

மதுரைத்தமிழ்ச்சங்கநிருவாகஸபைத்தீர்மானங்கள்:— க௪௦

மரம்படுதீங்கனி:—ஸ்ரீ. பண்டித S. அருளம்பலம் அவர்கள் உசு

மஹாவித்வான் மறைவு:— ஸ்ரீ. ப. ரெ. திருமலையையங்காரவர்கள் கஎஎ

மௌரியர் தென்னிந்தியப் படையெடுப்பு:— ஸ்ரீ. ராவ்ஸாஹிப் S. வையாபுரிப் பிள்ளையவர்கள் B.A., B.L. அசு

வச்சத்தொள்ளாயிரத்தில் மிச்சம்:— ஸ்ரீ. பண்டிதர். கா. பொ. இரத்தினம் அவர்கள் B.A. (Hons.) B.O.L., சரு

வள்ளுவர்வாய்மொழி:— ஷை ஷை எரு, க௦௫

அநுபந்தம்.

ஆங்கிலகலாசாலைத்தமிழ்ப்பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு:— (பகுதி-கூல் பக்கம் 1—10.)

நூல்கள்.

முற்றுப்பெறுதவை.

குருகைமான்மியத்து மாறன்திருவவதாரச் சருக்கம்:— பத்திராசிரியர் (பகுதி ச, ருல் பக். ருஎசு-ல்1–8)

பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும்:— ஸ்ரீ. சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளையவர்கள் (பகுதி 1–8)

செந்தமிழ் ௪௬-ஆம் தொகுதிக்குப் பொருளுரை வழங்கியோர்பெயரும் பொருளுரைகளின் பெயரும் பக்கமும்

ஸ்ரீ. உப. வே. வித்வான் பிரதிவாதிபயங்கரம் அண்ணங்காராசாரியர் ஸ்வாமி, காஞ்சீபுரம்.

அறுதாபக்குறிப்பு ௧௪௧

திரு. கோ. அப்பனையங்காரவர்கள், எதிர்க்கோட்டை.

இரங்கற்பாக்கள் ௧௭௫

திரு. பெ. நா. அப்புஸ்வாமிஐயரவர்கள், B.A., B.L. மயிலாப்பூர்.

நன்மையும் தீமையும் ௧௮௬

திரு. R. அரங்கராஜையங்காரவர்கள் B.A. டில்லி.

நன்பு ௫௬

திரு. S. அருளம்பலம் அவர்கள், காலி, கொழும்பு.

மரம்படுதீங்கனி ௨௬

திரு. அலங்காரதேவராஜையங்காரவர்கள், கருப்பட்டி, மதுரைஜில்லா

சோலைமலைக்குறவஞ்சி ௧௦௧

திரு. வித்வான். S. ஆழ்வாரையங்காரவர்கள், மதுரை.

இரங்கற்பாக்கள் ௧௭௦

திரு. பண்டிதர். கா. போ. இரத்தினம் அவர்கள் B.A. (Hons.) B.O.L. கொழும்பு.

இலக்கிய இன்பம் ௧௮௧

வச்சத்தொள்ளாயிரத்தில் மிச்சம் ... ௪௫

வள்ளுவர்வாய்மொழி ... ௭௫, ௧௦௫

திரு. வே. வ. இராமசாமி அவர்கள், தமிழ்த்தென்றலாசிரியர், விருதுநகர்

அறுதாபக்குறிப்பு ௧௪௪

திரு. பண்டித. இராமசுப்பிரமணியநாவலரவர்கள், பதுமநாபபுரம், தக்கலை P. O.

திருக்கருவைவெண்பாவந்தாதி ... ... கஎ

திரு. பாலகவி. வயிநாகரம். வே. இராமநாதன்செட்டியாரவர்கள், தேவகோட்டை.

இரங்கற்பாக்கள் ... ... கடுகூ

திரு. சி. இராமாநுஜையங்காரவர்கள், மதுரை.

ஆசிரியர்பிரிவு கந௩

இந்தியதேசியக்கொடிவாழ்த்து ... ... கஉகூ

இரங்கற்பாக்கள் ... ... கசரு

சுதந்திரதினவிழா நிகழ்ச்சி ... ... கஉரு

விபுலாநந்தர்மறைவு ... ... கஎஅ

திரு. வித்வான் ரா. இராமாநுஜையங்காரவர்கள், இராமநாதபுரம்

இரங்கற்பாக்கள் ... ... கசுச

பன்னிருதிங்கட்பெயரும்வந்தபாட்டு ... கரு

திரு. வித்வான். ரே. இராமையங்காரவர்கள், மதுரை.

இரங்கற்பாக்கள் ... ... கஎச

திருப்பதிக்கோவை ... ... ருகூ

திரு. சி. கணேசையரவர்கள், யாழ்ப்பாணம்.

அநுதாபக்குறிப்பு ... ... கசச

இரங்கற்பாக்கள் ... ... கஎச

இல்லறக்கிழத்திமாண்புகள் ... ... அஉ

செந்தமிழ் ... ... ரு௩

தமிழ்நாட்டுமக்களின் சில ஒழுக்கமரபுகள் ... க

திரு. மஹாமஹோபாத்யாய பண்டிதமணி மு. கதிரேசச்செட்டியாரவர்கள்.

அநுதாபக்குறிப்பு ... ... கசஉ

சுவாமி விபுலாநந்தர் மறைவு ... ... கஎகூ

திரு. பண்டிதர். நா. கனகராஜையரவர்கள், புதுக்கோட்டை.

இரங்கற்பாக்கள் ... ... கசு0

திரு. T. V. சதாசிவபண்டாரத்தாரவர்கள், ஆசிரியர், அண்ணுமலை பல்கலைக்கழகம்.

கொல்லம் ஆண்டு ... ... ருரு

திரு. K. சிவஞானம்பிள்ளையவர்கள், மதுரைத்தமிழ்ச்சங்கக் கலாசாலையாசிரியர்.

இரங்கற்பாக்கள் ... ... கடுரு

திரு. வை. சுந்தரேசவாண்டையாரவர்கள், திருவையாறு.

திருக்கோளிலிக்கல்வெட்டுக்கள் ... ... ககஎ

திரு. சு. சோமசுந்தரபாரதியாரவர்கள் M.A. B.L. பசுமலை.

அநுதாபக்குறிப்பு ... ... கசரு

திரு. சுவாமி ஞானப்பிரகாசரவர்கள், யாழ்ப்பாணம்.

பண்டைமக்களின் பொது இருப்பிடம் ... ரு, சுஅ

திரு. ப. ரே. திருமலைஐயங்காரவர்கள், திருவல்லிக்கேணி, சென்னை.

மஹாவித்வான் மறைவு ... ... கஎஎ

திரு. சு. நல்லசிவன்பிள்ளையவர்கள், ஆசிரியர், மதுரைத்தமிழ்ச் சங்கக்கலாசாலை.

இரங்கற்பாக்கள் ... ... கசகூ

திரு. க. சு. நவநீதகிருஷ்ணபாரதியவர்கள், மாவிட்டபுரம், தெல்லிப் பழை, யாழ்ப்பாணம்.

பாரசுதந்திரத்திருநாட்பாட்டு ... ... கருக

பாரதசுதந்திரதினவிழா வாழ்த்துப்பாக்கள். ... கருஉ

திரு. பண்டித. சித. நாராயணசாமியாரவர்கள், கல்லல்.

இரங்கற்பாக்கள் ... ... கசுஉ

திரு. ஜே. நாராயணசுந்தரமையங்காரவர்கள், இராமநாதபுரம்.

இரங்கற்பாக்கள் ... ... கசுரு

திரு. வித்வான். E. G. நாராயணையங்காரவர்கள், மதுரை.

இரங்கற்பாக்கள் ... ... கஎசு

திரு. திவான்பஹதூர் V. பாஷ்யமையங்காரவர்கள், கீழ்ப்பாக்கம், சென்னை.

அநுதாபக்குறிப்பு... ... ... கசஉ

திரு. வித்வான். பு, சி. புன்னைவனநாதமுதலியாரவர்கள், தருமபுரம்.

இரங்கற்பாக்கள் ... ... கருஅ

திரு. வித்வான் A. பூவராகபிள்ளையவர்கள், ஆசிரியர், அண்ணாமலைபல்கலைக்கழகம்.

இரங்கற்பாக்கள் ... ... கருஎ

திரு, பேராசிரியர் ஜே. பி. மாணிக்கம் அவர்கள் M.A. L.T. சென்னை.

ஆராய்ச்சியின் முக்கியத்தன்மை... ... கூ

திரு. வே. முத்துஸாமி ஐயரவர்கள் M.A. L.T. அரங்கநாதபுரம்.

இரங்கற்பாக்கள் ... ... கஎஉ

திரு. இ. சே. வரதராஜையரவர்கள், ஆசிரியர், அண்ணாமலைபல்கலைக்கழகம்.

இரங்கற்பாக்கள் ... ... கருரு

திரு. ராவ்ஸாஹிப் S. வையாபுரிப்பிள்ளையவர்கள் B.A. B.L. சென்னை.

அநுதாபக்குறிப்பு ... ... கசங

மௌரியர் தென்னிந்தியப்படையெடுப்பு ... அகூ

திரு. சே. வே. ஜம்புலிங்கம்பிள்ளையவர்கள், மயிலாப்பூர், சென்னை.

கச்சிக்கலம்பக அரங்கேற்றவைபவம் ... சகூ

தமிழ்வசனநடை ... ... சுரு

திருவெங்கைக்கோவை ... ... ககஉ

தொல்காப்பியத்திற்கண்ட தமிழர்சமயம் ... எகூ

பூண்டி அரங்கநாதமுதலியார் தனிக்கவிகள் ... உங

திரு. வித்துவான். சிரோமணி. V. N. ஸ்ரீராமதேசிகாசாரியரவர்கள், வத்தலக்குண்டு.

இரங்கற்பாக்கள் ... ... கசுசு